# நடப்பு நிகழ்வுகள் மே 1- 31, 2024



| வ. எண். | தலைப்புகள் | பக்கம் எண். |
| --- | --- | --- |
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | தேசிய நிகழ்வுகள் | 6 |
| 3 | திட்டங்கள் | 9 |
| 4 | சர்வதேச நிகழ்வுகள் | 10 |
| 5 | இந்தியா மற்றும் இதர நாடுகள் | 11 |
| 6 | மாநாடுகளும் உச்சி மாநாடுகளும் | 13 |
| 7 | பாதுகாப்பு | 15 |
| 8 | பொருளாதாரம் | 20 |
| 9 | நியமனங்கள் | 25 |
| 10 | விருதுகள் | 26 |
| 11 | புகழ்பெற்ற நபர்கள் | 30 |
| 12 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் | 32 |
| 14 | விளையாட்டுகள் | 41 |
| 15 | அறிக்கைகள் | 43 |
| 16 | தரவரிசைப்பட்டியல் | 45 |
| 17 | முக்கிய தினங்கள் | 47 |

# தமிழ்நாடு

➢ **சென்னை, இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் மின் விமானத்தின் (ePlane's) எலக்ட்ரிக் ஏர் டாக்சி 2025-இல் தொடங்கப்பட உள்ளது**

✓ சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் உருவான மின் விமான நிறுவனம், நகர்ப்புற நெரிசலைக் குறைப்பதில் கவனம் செலுத்தி, மார்ச் 2025க்குள் ஒரு மின்சார ஏர் டாக்சி முன்மாதிரியை அறிமுகப்படுத்த உள்ளது.



✓ இந்த நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலராகிய சத்தியா சக்ரவர்த்தி, ஆரம்பநிலை டிரோன் வணிகமயமாக்கல் மற்றும் விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரின் சான்றிதழை எதிர்நோக்கி உள்ள சான்றளிக்கக்கூடிய eVTOL விமான முன் மாதிரிக்கான திட்டங்களை அறிவித்தார்.

✓ இண்டர்குளோப் மற்றும் ஆர்ச்சர் ஏவியேஷன் கூட்டாண்மை நிறுவனம் 2026ஆம் ஆண்டுக்குள் மின்சார விமான டாக்சி சேவையைத் தொடங்கும்.

➢ **தமிழ்நாட்டின் பொருளாதாரம் 10.69 விழுக்காடு வரை உயர வாய்ப்பு உள்ளது**

✓ 2024-25ல் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 8.08 விழுக்காடு முதல் 10.69 விழுக்காடு வரை வளர்ச்சி அடையக்கூடும்.




✓ இந்த உண்மையான வளர்ச்சி விகித புள்ளி விவரங்களை வழங்கி, மெட்ராஸ் ஸ்கூல் ஆப் எகனாமிக்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் இயக்குநர்களாகிய திருவாளர்கள் சி. ரங்கராஜன் மற்றும் கே.ஆர். சண்முகம் ஆகியோரால் நடத்தப்பட்ட மாநிலப் பொருளாதாரம்

குறித்த ஆய்வு, சமீபத்தில் முடிவடைந்த 2023-24 நிதியாண்டில், மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் 8.08 விழுக்காடு முதல் 9.44 விழுக்காடு வரை மாறுபடும் என்று மதிப்பிட்டுள்ளது.

- ✓ 'சிறப்பாகச் செயல்படும் மாநிலமாக' தமிழ்நாடு இருப்பதால், இதன் வளர்ச்சி எல்லா நிலைகளிலும், இந்தியாவைவிட வேகமாக இருக்கும்.


## ➢ தமிழ்நாடு அரசு 23 மூர்க்கமான நாய் இனங்களைத் தடை செய்துள்ளது




- ✓ தமிழ்நாடு அரசின் கால்நடை பராமரிப்புத்துறை, 'மூர்க்கமானவை' என்று கருதப்படும் ராட்வீலர், பிட்புல், டெரியர் மற்றும் டோசா இனு போன்ற நன்கு அறியப்பட்ட 23 வகை நாய் இனங்களுக்குத் தடை விதித்தது. ராட்வீலர் நாய் ஒரு குழந்தையை கடுமையாக காயப்படுத்திய ஒரு துயரமான சம்பவம் நடைபெற்றதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- ✓ மூர்க்கமானது மற்றும் தீங்கு விளைவிக்கும் திறன் காரணமாக, பல நாடுகளும் பிராந்தியங்களும், சில குறிப்பிட்ட நாய் இனங்கள் மீது தடைகள் அல்லது கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.
- ✓ இந்தச் சட்டங்கள் நாய் தாக்குதல் சம்பவங்களைக் குறைப்பதையும் பொதுப் பாதுகாப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

## ➢ தமிழ்நாடு அரசின் வணிக சாம்பியன் திட்டம் (Business Champions Scheme)

- ✓ தமிழ்நாடு அரசின் வணிக சாம்பியன்கள் திட்டம் 1300 தாழ்த்தப்பட்ட- பழங்குடியின தொழில்முனைவோருக்கு உதவியுள்ளது.




- ✓ மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த, புதிய மற்றும் தற்போதுள்ள தொழில் முனைவோர் 1300 பேர், அரசின் முன்னோடித் திட்டமாகிய அண்ணல் அம்பேத்கார் வணிக சாம்பியன் திட்டத்தின்கீழ் மாநிலத்தில் தங்கள்

தொழிலைத் தொடங்க அல்லது மேம்படுத்துவதற்காக வாங்கிய கடனுக்கான மூலதன மானியமாகிய 134.86 கோடியைப் பெற்றுள்ளனர்.

- **புதிய இந்திய எழுத்தறிவுத் திட்டம் அல்லது புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் (New India Literacy Programme (NILP) or Puthiya Bharatha Ezhutharivu Thittam)**




- புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டம் அல்லது புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022-2027ன்கீழ், கல்வியறிவு பெறாதவர்களைக் கண்டறிவதற்காக பள்ளிக் கல்வித் துறையானது, தமிழ்நாடு முறைசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கத்தின் மூலம் கணக்கெடுப்பை மேற்கொண்டு வருகிறது.
- மே முதல் வாரத்தில் இருந்து இதுவரை 15 வயதுக்கு மேற்பட்ட 18,464 ஆண்கள், 79,130 பெண்கள் என மொத்தம் 97,594 பேர், 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட இல்லம் தேடி கல்வி மற்றும் நேரு யுவகேந்திரா தன்னார்வலர்களால் 25,000 மையங்களில், ஆறு மாத பயிற்சி பெறுவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதை பள்ளிக் கல்வித் துறை செயலாளர் ஜே. குமரகுருபரன் கூறியுள்ளார்.

# தேசிய நிகழ்வுகள்

➢ **இஷான் திட்டம் (Project ISHAN)**

✓ இந்திய விமான நிலைய ஆணையம் இஷான் திட்டத்தின்கீழ் நான்கு வான்வெளிப் பகுதிகளை ஒன்றாக இணைக்கும் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.




✓ இஷான் (ISHAN) என்பது Indian Single Sky Harmonized Air Traffic Management என்பதைக் குறிக்கும். இது நாக்பூரைத் தலைமையிடமாகக் கொண்டது மற்றும் அரசின் ஒரு நாடு ஒரு வான்வெளி என்ற நோக்கத்தை நிறைவேற்றுகிறது.

✓ இந்திய வான்வெளி தற்போது 4 விமான தகவல் பகுதிகள் (flight information regions) மற்றும் துணை விமான தகவல் பகுதிகளைக் கொண்டுள்ளது.

✓ டெல்லி, மும்பை, கொல்கத்தா மற்றும் சென்னையில் உள்ள நான்கு விமான தகவல் பகுதிகளை ஒன்றாக இணைத்து நாக்பூரில் ஒரே தொடர்ச்சியான வான்வெளியாக ஏற்படுத்த இந்தியா ஒரு பெரிய நடவடிக்கையைத் திட்டமிட்டுள்ளது.

➢ **IREDA வுக்கு நவரத்தின அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது**

✓ இந்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான, இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு (The Indian Renewable Energy Development Agency - IREDA) சமீபத்தில், 'நவரத்னா அந்தஸ்து' வழங்கப்பட்டுள்ளது.




✓ ஒன்றிய அரசின் நிதி அமைச்சகத்தின்கீழ் உள்ள பொது நிறுவனங்களின் துறையால் இந்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

✓ இந்திய அரசு அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் மகாரத்னா, நவரத்னா மற்றும் மினிரத்னா என மூன்று வகைகளாகப் பிரித்துள்ளது.

➢ **தமீழீழ விடுதலைப் புலிகள் (LTTE) மீதான தடையை மேலும் ஐந்து வருடங்களுக்கு ஒன்றிய அரசு நீட்டித்துள்ளது**

✓ தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒன்றிய அரசு நீட்டித்துள்ளது.

✓ இந்தியாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு தொடர்ந்து அச்சுறுத்தலாக இருக்கும் விடுதலைப் புலிகளின் செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு இந்த முடிவை எடுத்துள்ளதாக உள்துறை அமைச்சகம் தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

✓ ஒன்றிய அரசு 2019 மே மாதம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு சட்ட விரோத அமைப்பாக அறிவித்து ஐந்து ஆண்டுகளுக்குத் தடை செய்தது.

➢ **உலக ஆசிய-பசிபிக் பிராந்தியப் பதிவேட்டின் யுனெஸ்கோவின் நினைவகம் (UNESCO's Memory of the World Asia-Pacific Regional Register)**

✓ இந்தியாவின் வளமான இலக்கிய பாரம்பரியம் மற்றும் கலாச்சார மரபு யுனெஸ்கோவின் உலக ஆசிய-பசிபிக் பிராந்திய பதிவேட்டில் நுழைந்துள்ளது.





✓ ராம்சரித்மனாஸ், பஞ்ச தந்திரக் கதைகள் மற்றும் சஹ்ருதயலோக – லோகனா ஆகியவை யுனெஸ்கோவின் உலக ஆசிய-பசிபிக் பிராந்திய பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

✓ ஆசியா பசிபிக் MOWCAP க்கான உலகக் குழுவின் 10வது கூட்டத்தின்போது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தில் இந்த அங்கீகாரத்தைப் பெறுவதில் இந்திரா காந்தி தேசிய கலை மையம் (Indira Gandhi National Centre for the Arts) முக்கிய பங்கு வகித்தது.

➢ **இந்தியாவின் மிகவும் உயரமான சுரங்கம் சர்வதேச புக் ஆப் ஆனரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது**

✓ புரோ இந்தியா (BRO India) நிறுவனத்தால் கட்டப்பட்ட சேலா சுரங்கப்பாதை, சர்வதேச புக் ஆப் ஹானர் அமைப்பால் நாட்டின் மிக உயரமான சுரங்கப்பாதையாக அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.




- ✓ 2.598 கிமீ நீளமுள்ள இந்த சுரங்கப்பாதை தேஜ்பூர் - தவாங் சாலையில் 13000 அடி உயரத்தில் அமைந்துள்ளது.
- ✓ 13000 அடி உயரத்தில் அமைந்துள்ள, மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த சேலா சுரங்கப்பாதையானது அருணாசலப் பிரதேசத்தில் உள்ள தவாங்கிற்கு அனைத்து காலநிலைகளிலும் இணைப்புகள் வழங்கப்படுவதை உறுதி செய்யும்.

APOLLO STUDY CENTRE

# திட்டங்கள்

➢ **என் கல்லூரி கனவு திட்டம்**




- ✓ தாழ்த்தப்பட்ட வகுப்பு மற்றும் பழங்குடியின வகுப்பு மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கை விகிதத்தை மேம்படுத்தவும், இடைநிற்றல் எண்ணிக்கையைக் குறைக்கவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, ‘என் கல்லூரி கனவு திட்டம்’ என்ற ஒரு உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் முயற்சியைத் தொடங்கி வைத்துள்ளது.
- ✓ மாநிலத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் படித்து இந்த ஆண்டு பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு எழுதிய சுமார் 1.28 இலட்சம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின வகுப்பு மாணவர்களுக்கு உதவும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டம் இந்த வகையில் இதுவே முதலாவதாகும்.

# சர்வதேச நிகழ்வுகள்

- **எல்லா பனிப்பாறைகளையும் இழந்த முதல் நாடு**
- ✓ வெனிசூலா சமீபத்தில் ஒரு கடுமையான சுற்றுச்சூழல் மைல்கல்லை எதிர்கொண்டது. இது காலநிலை நெருக்கடியின்கடுமையான யதார்த்தத்தைக் குறிக்கிறது.




- ✓ இந்த நாடு, இந்த மாதத் தொடக்கத்தில், ஹம்போல்ட் பனிப்பாறையை ஒரு பனிப் புலமாக மறுவகைப்படுத்தப்பட்டதன்மூலம், நவீன வரலாற்றில் தன் அனைத்து பனிப்பாறைகளையும் இழந்த முதல் நாடு என்ற பெயரைப் பெறுகிறது.
- ✓ காலநிலை மாற்றம் ஒரு தொலைதூர அச்சுறுத்தல் அல்ல, ஆனால் உடனடி நடவடிக்கை தேவைப்படும் ஒரு அவசர நெருக்கடி என்பதை இந்த நிகழ்வு அப்பட்டமாக நினைவூட்டுகிறது.

# இந்தியா மற்றும் இதர நாடுகள்

- **இந்தியாவும் மாலத்தீவுகளும்**

✓ வர்த்தக ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்தியாவும் மாலத் தீவுகளும் பேச்சு வார்த்தை நடத்தின.




✓ இந்தியாவும் மாலத்தீவுகளும் பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன. இது 2022இல் 500 மில்லியன் டாலருக்கும் அதிகமான வர்த்தகத்துடன் வலுவான உறவைக் குறிக்கிறது.

✓ 1981 இந்தியா மற்றும் மாலத்தீவு வர்த்தக ஒப்பந்தத்தின்கீழ், அத்தியாவசியப் பொருட்களின் ஏற்றுமதிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

✓ இந்தியா 2022இல் மாலத்தீவின் 2வது பெரிய கூட்டாளியாகவும், 2023இல் மிகப்பெரிய வர்த்தக கூட்டாளியாகவும் உருவெடுத்தது.

- **இந்தியாவும் கானாவும்**

✓ இந்தியா மற்றும் கானா நாடுகளுக்கு இடையே 4வது கூட்டு வர்த்தகக் குழு கூட்டம் நிறைவு பெற்றது.




✓ இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்தில், இந்தியா-கானா கூட்டு வர்த்தகக் குழுவின் நான்காவது அமர்வு சமீபத்தில் அக்ராவில் (Accra) நடைபெற்றது.

✓ மே 2-3 தேதிகளில் நடைபெற்ற இந்த இரண்டு நாள் சந்திப்பின்போது, கானா வங்கிகளுக்கு இடையேயான பணம் செலுத்துதல் மற்றும் செட்டில்மென்ட் அமைப்பில் (Ghana Interbank Payment and Settlement System) இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (National Payments Corporation of India) ஒருங்கிணைந்த கட்டண

இடைமுகத்தை (UPI) ஆறு மாதங்களுக்குள் செயல்படுத்துவதற்கு இந்தியாவும் கானாவும் ஒத்துக் கொண்டன.

- ✓ இந்த இரண்டு நாடுகளும் டிஜிட்டல் மாற்றத் தீர்வுகள் மற்றும் உள்ளூர் நாணய தீர்வு முறைகள் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான சாத்தியக் கூறுகளும் இந்தக் கூட்டத்தின்போது ஆராயப்பட்டன.

➢ **இந்தியாவும் ஈரானும் சபாஹர் துறைமுக செயல்பாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன**

- ✓ சபாஹர் துறைமுகத்தில் ஒத்துழைப்பு தொடர்பான பொதுவான கட்டமைப்பு முடிந்து எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தியாவும் ஈரானும் திங்களன்று அதன் செயல்பாட்டிற்கான 10 ஆண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.




- ✓ இந்திய துறைமுக உலகளாவிய நிறுவனம் (Indian Ports Global Ltd) மற்றும் ஈரானின் துறைமுகம் மற்றும் கடல்சார் அமைப்பு (Port and Maritime Organisation) ஆகியவற்றுக்கு இடையே ஷாஹித்-பெஹெஸ்தி முனையத்தின் செயல்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்காக நீண்ட கால ஒப்பந்தம் கையெழுத்தானது.
- ✓ சபஹர் துறைமுகத்தை இந்தியா மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2015 மே மாதம் கையெழுத்தானது.
- ✓ இந்த ஒப்பந்தம் மே 23, 2016 அன்று நிறைவேற்றப்பட்டது.


# மாநாடுகளும் உச்சி மாநாடுகளும்

## ➢ இந்தியா – நேபாளம் பி2பி உச்சி மாநாடு

- ✓ முதலீட்டுக்குப் பிந்தைய உச்சி மாநாடாகிய இந்தியா- நேபாளம் பி2பி உச்சி மாநாட்டை காத்மாண்டுவில் உள்ள இந்திய தூதரகம் ஏற்பாடு செய்தது.
- ✓ காத்மாண்டு பள்ளத்தாக்கில் நடைபெற்ற மூன்றாவது நேபாள முதலீட்டு உச்சி மாநாட்டிற்குப் பிறகு காத்மாண்டுவில் உள்ள இந்திய தூதரகம் பி2பி உச்சி மாநாட்டிற்கு ஏற்பாடு செய்தது.
- ✓ இந்த பி2பி உச்சி மாநாடானது, நேபாள முதலீட்டு வாரியம் மற்றும் நேபாள இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.
- ✓ இந்த பி2பி சந்திப்பின்போது, MICCIA மற்றும் NICCI இடையே ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. 3வது நேபாள முதலீட்டு உச்சி மாநாடு 2024 ஏப்ரல் 28 முதல் 29 வரை ஏற்பாடு செய்யப்பட்டது.

## ➢ இந்தியா - இந்தோனேசியா கூட்டு பாதுகாப்பு ஒத்துழைப்புக் குழு (India-Indonesia Joint Defence Cooperation Committee)

- ✓ மே 3 அன்று, 7வது இந்தியா - இந்தோனேசியா கூட்டு பாதுகாப்பு ஒத்துழைப்புக் குழுக் கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.




- ✓ இந்த சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து இருதரப்பினரும் திருப்தி தெரிவித்தனர்.
- ✓ இந்த இரண்டு நாடுகளும் பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்புக்கான பணிக்குழுக்களின் கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட பல்வேறு இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் மதிப்பாய்வு செய்தன.
- ✓ இந்தியாவும் இந்தோனேசியாவும் ஒரு விரிவான மூலோபாய கூட்டாண்மையைக் கொண்டுள்ளன மற்றும் இந்தோ-பசிபிக் பற்றிய பொதுவான பார்வையை எட்டியுள்ளன.

## ➢ உலக ஹைட்ரஜன் உச்சி மாநாடு 2024

- ✓ நெதர்லாந்தில் நடைபெற்ற 2024 உலக ஹைட்ரஜன் உச்சி மாநாட்டில் இந்தியா தனது பசுமை ஹைட்ரஜன் திறனை எடுத்துக் காட்டியது.




- ✓ மே 13- 15, 2024இல் நெதர்லாந்தின் ரோட்டர்டாமில் நடைபெறும் உலக ஹைட்ரஜன் உச்சி மாநாடு 2024இல் இந்தியா முதல் முறையாக தனது அரங்கை அமைத்துள்ளது.
- ✓ இந்தியா ரூ.19,744 கோடி மதிப்பீட்டில், தனது தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தை ஜனவரி 2023இல் அறிமுகப்படுத்தியது.
- ✓ 2030ஆம் ஆண்டின் இறுதிக்குள் 5 மில்லியன் மெட்ரிக் டன் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி இலக்கை அடைவதற்காக, இந்தியா தனது இலட்சிய இலக்கை நிர்ணயித்துள்ளது.
- ✓

➢ **10வது உலக நீர் மன்றம்**

- ✓ 10வது உலக நீர் மன்றம், 'பகிரப்பட்ட செழுமைக்கான நீர்' என்ற கருப்பொருளில் மே 21 அன்று இந்தோனேசியாவின் பாலியில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியது. இந்த மன்றத்தில் பல நாட்டுத்தலைவர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




- ✓ இந்த மன்றம் நான்கு முக்கியமான தலைப்புகளில் கவனம் செலுத்தியது. அவை: நீர் பாதுகாப்பு, சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம், உணவு மற்றும் ஆற்றல் பாதுகாப்பு மற்றும் இயற்கைப் பேரழிவுகளைத் தணித்தல்.

# பாதுகாப்பு

➢ **இந்தியாவின் முதல் உள்நாட்டு குண்டுவீச்சு ஆளில்லா வான் வாகனம் (India's First Indigenous Bomber UAV)**

✓ ஃபிளையிங் வெட்ஜ் டிபென்ஸ் மற்றும் ஏரோஸ்பேஸ் டெக்னாலஜிஸ் அமைப்பு பெங்களூரில் FWD-200B ஐ அறிமுகப்படுத்தியது. இது உள்நாட்டு ஆளில்லா வான் வாகன உற்பத்தியில் இந்தியா நுழைந்துள்ளதைக் குறிக்கிறது.




✓ நடுத்தர உயரம், நீண்ட காலம் தாங்கும் திறன் கொண்ட இந்த ட்ரோன், 100 கிலோ பேலோடைச் சுமந்து செல்லும் திறன் கொண்டது. இது கண்காணிப்பு மற்றும் துல்லியமான தாக்குதல்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

✓ இது 12-20 மணி நேரம் தாக்குப் பிடிக்கும் திறன், மணிக்கு 370 கிமீ வேகம் மற்றும் 200 கிமீ நிலைய வரம்பு ஆகிய அம்சங்களைக் கொண்டுள்ளதால், ஆளில்லா வான் வாகனங்களுக்கான விலையுயர்ந்த இறக்குமதிகளைச் சார்ந்திருப்பதைத் தவிர்க்கிறது.

➢ **ககன் ஸ்டிரைக் - II (Gagan Strike-II)**


✓ இந்திய இராணுவத்தின் மேற்கு கமாண்ட் கட்டுப்பாட்டில் உள்ள இந்திய ராணுவ கர்கா கார்ப்ஸ் படைப்பிரிவு, பஞ்சாப்பில் பல இடங்களில் இந்திய விமானப்படையுடன் இணைந்து மூன்று நாள் கூட்டுப் பயிற்சியை வெற்றிகரமாக நடத்தியது.




✓ இந்தப் பயிற்சியானது வளர்ந்த நிலப்பரப்புகளில், இயந்திரமயமாக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவாக, தாக்குதல் ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்துவதையும் சரிபார்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ‘ககன் ஸ்டிரைக்- II’ என்று பெயரிடப்பட்ட இந்தப் பயிற்சியானது, அப்பாச்சி மற்றும் ஏஎல்எச் - டபிள்யூஎஸ்ஐ ஹெலிகாப்டர்கள் (ALH-WSI helicopters), ஆயுதமில்லா வான்வழி வாகனங்கள் மற்றும் இந்திய இராணுவத்தின் சிறப்புப் படைகள் உள்ளிட்ட பல்வேறு படைப்பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

- **இந்திய விமானப் படையின் பாம்பி பக்கெட் ஆபரேஷன்கள்**
- காட்டுத் தீயைக் கட்டுப்படுத்துவதில் இந்திய விமானப்படை, நாட்டிற்கு தீவிரமாக உதவி வருகிறது.




- பௌரி கர்வால் செக்டாரில் ஏற்பட்ட தீவிபத்துகளின் சேதங்களைச் சரிசெய்யும் விதமாக, இந்திய விமானப் படை அதன் எம்ஐ17 வி5 ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்தி, பாம்பி பக்கெட் நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.
- கடந்த இரண்டு நாட்களில், இந்திய விமானப்படை மொத்தம் 23 சுற்றுகளை மேற்கொண்டுள்ளது. பதினொன்றரை மணி நேரம் நீடித்த இந்த நடவடிக்கையின்போது, மலைகளில் எரியும் தீப்பிழம்புகளை எதிர்த்துப் போராடுவதற்கு 44,600 லிட்டர் தண்ணீர் பயன்படுத்தப்பட்டது.

- **கேடட் டிபன்ஸ் அமைப்பு இந்தியாவின் முதல் ‘LAM Systems’ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.**

- கேடட் பாதுகாப்பு அமைப்பு (Kadet Defence Systems) பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்புடன் இணைந்து, இந்தியாவின் முதல் உள்நாட்டு லோடரின் வான்வழி ஆயுதங்களை (Loitering Aerial Munitions) உருவாக்கியுள்ளது.



- ✓ CALM மற்றும் சிறிய ஆளில்லா போர் விமானங்கள் போன்ற தொழில்நுட்பங்களைக் கொண்ட இந்த லோடரின் வான்வழி ஆயுதங்கள், 90 விழுக்காடு உள்ளூர் தயாரிப்புகளையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. இது உள்நாட்டு உற்பத்திக்கான அர்ப்பணிப்புடன், பல்வேறு நிலப்பரப்புகளில் மேம்பட்ட செயல் திறனை உறுதியளிக்கிறது.

## ➢ **‘சக்தி’ பயிற்சி**


- ✓ மே 13 முதல் 26 வரை இந்தியா மற்றும் பிரான்ஸ் இணைந்து ‘சக்தி’ என்று கூட்டு இராணுவப் பயிற்சியின் 7வது பதிப்பை நடத்துகின்றன.




- ✓ மேகாலயாவின் உம்ரோய் பகுதியில் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படும்.
- ✓ இந்தப் பயிற்சியின் நோக்கம், துணை மரபுவழிச் சூழ்நிலையில், பல் பிரிவு செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக, இந்தியா மற்றும் பிரான்ஸ் நாடுகளின் கூட்டு இராணுவத் திறனை மேம்படுத்துதல் ஆகும்.
- ✓ இந்தப் பயிற்சியானது, இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆயுதப் படைகளுக்கு இடையே இயங்கும் தன்மையை மேம்படுத்த உதவும்.

## ➢ **இக்லா-எஸ் வான் பாதுகாப்பு அமைப்புகள் (Igla-s Air Defense Systems)**

- ✓ இந்திய இராணுவம், ரஷ்யாவின் மிகக்குறுகிய தூர வான் பாதுகாப்பு அமைப்பாகிய இக்லா-எஸ்-இன் இன்னொரு தொகுப்பை விரைவில் பெறத் தொடங்க உள்ளது.



- ✓ இது ரஷ்யாவால் உருவாக்கப்பட்ட மனிதர்கள் கொண்டு செல்லக்கூடிய (man-portable air defence system -MANPADS) வான் பாதுகாப்பு அமைப்பாகும்.
- ✓ இது ஒரு தனிநபர் அல்லது குழுவால் இயக்கப்படக்கூடிய கையடக்க பாதுகாப்பு அமைப்பாகும்.

- ✓ இது தாழ்வாகப் பறக்கும் விமானங்களை வீழ்த்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் க்ரூஸ் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் போன்ற விமான இலக்குகளை அடையாளம் கண்டு செயல்படாமல் செய்ய முடியும்.

## ➢ முத்தரப்பு கடல்சார் பாதுகாப்பு பணிமனை (Trilateral Maritime Security Workshop)



- ✓ இந்தியா, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா முத்தரப்பு கடல்சார் பாதுகாப்புப் பட்டறையின் இரண்டாவது பதிப்பானது, கடல்சார் பாதுகாப்பு சவால்கள் மற்றும் பிராந்தியத்தில் மூன்று கடல்சார் அண்டை நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகளைப் பற்றி விவாதித்த பிறகு முடிவுற்றது.
- ✓ 'இந்தியப் பெருங்கடல் பிராந்தியம்: பிராந்திய கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான கூட்டுமுயற்சிகள்' என்ற கருப்பொருளில் இந்தக் கருத்தரங்கம் நடைபெற்றது.
- ✓ கொச்சியில் உள்ள ஐஎன்ஸ் துரோணாச்சார்யாவில் இந்தப் பயிற்சி நடைபெற்றது.

## ➢ சைபர் சுரக்ஷா பயிற்சி (Exercise Cyber Suraksha) – 2024

- ✓ பாதுகாப்புப் பணியாளர்களின் தலைவர் ஜெனரல் அனில் சவுகான் சைபர் சுரக்ஷா – 2024ஐ மே 22, 2024 அன்று தொடங்கி வைத்தார்.
- ✓ மே 20 முதல் மே 24 வரை நடைபெறும் இந்த நிகழ்விற்கு இந்தியாவின் பாதுகாப்பு சைபர் ஏஜென்சி பொறுப்பேற்றுள்ளது.
- ✓ இந்த சைபர் சுரக்ஷா 2024 பயிற்சியின் முக்கிய குறிக்கோள், நாட்டில் உள்ள அனைத்து இணைய பாதுகாப்பு நிறுவனங்களின் இணைய பாதுகாப்புத் திறன்களை மேம்படுத்துவதாகும்.
- ✓ இணையப் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள இராணுவம் மற்றும் முக்கிய அரசு நிறுவனங்கள் இணைந்து சிறப்பாகச் செயல்படுவதும், ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையைக் கொண்டு வருவதும் இதன் இலக்காகும்.

## ➢ கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணை (Anti-Radiation Missile) - Rudram-II'

- ✓ உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட கதிர்வீச்சு ஏவுகணையான ருத்ரம்-2இன் வெற்றிகரமான சோதனை மூலம் இந்தியா ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.




✓ ஒடிசா கடற்கரையில் உள்ள Su-30 MKI போர் விமானத்தில் இருந்து ஏவப்பட்ட இந்த ஏவுகணையானது இந்திய ஆயுதப் படைகளுக்கு ஒரு முக்கிய சொத்தாக மாற உள்ளது. இது எதிரி நாட்டின் வான் பாதுகாப்புப் பணிகளை அடக்குவதில் முக்கிய பங்கை ஆற்றுகிறது.

## ➢ செங்கொடி – 24 ('Red Flag 24') பயிற்சி




✓ இந்திய விமானப்படையானது, அமெரிக்காவின் அலாஸ்காவில் 16 நாள் பன்னாட்டு மெகா இராணுவப் பயிற்சியில் கலந்து கொண்டுள்ளது. இது தற்போதைய போர் சூழலில் பங்கேற்கும் படைகளுக்கு யதார்த்தமான பயிற்சி அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

✓ 'செங்கொடி- 24' எனப்படும் இப்பயிற்சி மே 30 முதல் ஜூன் 20 வரை நடைபெறும்.

# பொருளாதாரம்

➢ **ஏப்ரல் மாத ஜிஎஸ்டி வருவாய் புதிய உச்சத்தை எட்டியுள்ளது**

✓ ஏப்ரல் 2024 மாதத்தில் ஜிஎஸ்டி வசூல் 12.4 விழுக்காடு வளர்ச்சியுடன் 2.10 இலட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளது. திரும்பச் செலுத்துதல்களைக் கணக்கிட்டப் பிறகு, ஏப்ரல் 2024க்கான நிகர ஜிஎஸ்டி வருவாய் 1.92 இலட்சம் கோடியாக உள்ளது.




✓ ஒன்றிய சரக்கு மற்றும் சேவை வரி ரூ.43.846 கோடியாகவும், மாநில சரக்கு மற்றும் சேவை வரி ரூ.53,538 கோடியாகவும் இருந்தது. உள்நாட்டுப் பரிவர்த்தனைகள் அதிகமாக இருந்ததன்காரணமாக இந்த அதிகபட்ச ஜிஎஸ்டி பதிவு ஏற்பட்டுள்ளது.

✓ ஜூலை 2017இல் மறைமுக வரி சீர்திருத்தத்திற்குப் பிறகு பதிவ செய்யப்பட்ட அதிகபட்ச ஜிஎஸ்டி வசூல் இதுவாகும்.

➢ **இந்தியப் பொருளாதாரக் கண்ணோட்டம்**

✓ 2026இல் ஜெர்மனி மற்றும் ஜப்பானை விஞ்சி உலகின் மூன்றாவது பெரிய நுகர்வோர் சந்தையாக இந்தியா மாற உள்ளது.



✓ யுபிஎஸ்-இன் ‘இந்திய பொருளாதாரக் கண்ணோட்டங்கள்’ என்ற அறிக்கையின்படி, 2026ஆம் ஆண்டுக்குள் இந்தியா தனது உலகப் பொருளாதார நிலையை முன்னேற்றி உலகின் மூன்றாவது பெரிய நுகர்வோர் சந்தையாக மாற உள்ளது.

✓ இந்தியாவின் நுகர்வோர் சந்தை தொடர்ந்து வளர்ந்து பெருகிவருவதால், இந்த முன்னறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

✓ அந்த அறிக்கையின்படி, இந்தியா 2024இல் ஜெர்மனியையும், 20206இல் ஜப்பானையும் பின்னுக்குத் தள்ளி, உலகப் பொருளாதார வல்லரசாகத் தன் நிலையை முன்னேற்றும்.

APOLLO STUDY CENTRE

➢ **உலகளாவிய வர்த்தக ஆராய்ச்சி முயற்சி (Global Trade Research Initiative)**

✓ 2023-24இல் 118.4 பில்லியன் டாலர் வர்த்தகத்துடன் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாக சீனா இருந்தது.




✓ பொருளாதார சிந்தனையாளர் குழுவான குளோபல் டிரேட் ரிசர்ச் இனிஷியேட்டிவ் தரவுகளின்படி, 118.3 பில்லியன் டாலர்களுடன் இந்தியாவின் இரண்டாவது பெரிய வர்த்தகக் கூட்டாளியாக அமெரிக்கா இருந்தது.

✓ 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் சிறந்த வர்த்தக கூட்டாளியாக அமெரிக்கா விளங்கியது.

✓ இந்தத் தரவுகளின்படி, கடந்த நிதியாண்டில் சீனாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 8.7 விழுக்காடு அதிகரித்து 16.67 பில்லியன் டாலராக இருந்தது.

✓ சீனாவிலிருந்து இறக்குமதி 3.24 விழுக்காடு அதிகரித்து 101.7 பில்லியன் டாலராக உள்ளது.

✓ 2022-23இன் 78.54 பில்லியன் டாலராக இருந்த அமெரிக்காவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி, 2023-24ல் 1.32 விழுக்காடு குறைந்து 77.5 பில்லின் டாலராக ஆகியுள்ளது.

➢ **இந்தியாவின் 2024 பொருளாதார வளர்ச்சிக் கணிப்பு ஏறக்குறைய 7 விழுக்காடு மேல்நோக்கி இருக்கும் என்று ஐ.நா-வின் திருத்திய கணிப்பு தெரிவிக்கிறது.**



✓ 2024ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக் கணிப்பை ஐக்கிய நாடுகள் அமைப்பு திருத்தியுள்ளது. இது வலுவான பொது முதலீடு மற்றும் நெகிழ்வான தனியார் நுகர்வு ஆகியவற்றால் ஊக்கம் பெற்ற வலுவான விரிவாக்கத்தைக் குறிக்கிறது.

✓ இந்தியாவின் பொருளாதாரம் இப்போது 2024இல் 6.9 விழுக்காடு அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஜனவரியில் 6.2 விழுக்காடு கணிப்பில் இருந்து, 2025 இல் 6.6 விழுக்காடு வளர்ச்சி விகிதம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நம்பிக்கையான கண்ணோட்டம், தெற்காசியாவின் ஒட்டுமொத்த பொருளாதார செயல்திறனை உயர்த்துவதில் இந்தியாவின் பங்களிப்பை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

➢ **இந்தியாவின் இணையப் பொருளாதாரம் 2030ஆம் அண்டுக்குள் 1 டிரில்லியன் டாலரை எட்டும்**




- ✓ இந்தியாவின் இணையப் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்குத் தயாராக உள்ளது. தொழில் வல்லுநர்கள் 2030க்குள் 1 டிரில்லியன் டாலரை எட்டும் என்று கணித்துள்ளனர்.
- ✓ இந்த எழுச்சிக்கான முதன்மையாக காரணம் மின் வணிகத் துறையாகும். இது 25 விழுக்காடு என்ற வருடாந்திர விகிதத்தில் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 2023 நிதியாண்டில் 60 பில்லியன் டாலரில் இருந்து 325 பில்லியன் டாலராக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது உலக அளவில் மூன்றாவது பெரிய பொருளாதாரம் ஆகும்.

➢ **இந்தியாவின் 2024 வளர்ச்சிக் கணிப்பை 6.9 விழுக்காடாக ஐ.நா திருத்தியது**

- ✓ ஐ.நா சபை 2024ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் வளர்ச்சிக் கணிப்புகளைத் திருத்தியுள்ளது. இதன்படி, 2024 நிதியாண்டில் பொருளாதாரம் 6.9 விழுக்காடு வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




- ✓ ஐ.நா-வின் உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் அறிக்கையின்படி, 2024இல் இந்தியாவின் பொருளாதாரம் 6.9 விழுக்காடு வளர்ச்சியடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது ஜனவரியில் செய்யப்பட்ட 6.2 விழுக்காடு என்ற முந்தைய கணிப்பிலிருந்துஅதிகரித்துள்ளது.
- ✓ 2025ஆம் அண்டிற்கான வளர்ச்சி விகிதம் 6.6 விழுக்காடு ஆக இருக்கும் என்றும் அந்த அறிக்கை கணித்துள்ளது. இது முந்தைய முன்னறிவிப்பில் இருந்து மாற்றம் இல்லை என்பதைக் காட்டுகிறது.

➢ **இந்தியாவின் நான்காவது பெரிய ஏற்றுமதி பொருள்**

✓ ஸ்மார்ட்போன்கள் இப்போது இந்தியாவில் .இருந்து ஏற்றுமதியாகும் நான்காவது பெரிய பொருளாக உள்ளது. இது 42 விழுக்காடு வளர்ச்சியுடன் 2024 நிதியாண்டில் 15.6 பில்லின் டாலராக உள்ளது. இது முந்தைய அண்டை விட தரவரிசையில் ஒரு படி உயர்ந்துள்ளது.




✓ இந்தியாவின் முதன்மையான ஏற்றுமதிப் பொருட்களாக பெட்ரோலியப் பொருட்கள் ஆதிக்கம் செலுத்தின. இப்போது ஸ்மார்ட்போன்கள், மோட்டார் பெட்ரோலுக்குப் பதிலாக, 2024 நிதியாண்டில் நான்காவது பெரிய ஏற்றுமதிப் பொருளாக மாறியுள்ளது.

✓ வர்த்தகத் துறையின் தரவுகளின்படி, ஏற்றுமதியில் 158 விழுக்காடு அதிகம் காரணமாக ஸ்மார்ட்போன் ஏற்றுமதியில் இந்த உயர்வு காணப்படுகிறது.

➢ **இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சிக் கணிப்பு 6.7 விழுக்காடு**

✓ உலகளாவிய முதலீட்டு வங்கியான கோல்ட்மேன் சாக்ஸ் 2024 காலண்டர் ஆண்டிற்கான இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சியை 6.7 விழுக்காடாக உயர்த்தியுள்ளது.




✓ ரிசர்வ் வங்கியிடமிருந்து பம்பர் டிவிடெண்ட் பரிமாற்றத்தின் காரணமாக கூடுதல் நிதி இடவசதியுடன் நிலையான வளர்ச்சி வேகம் எதிர்பார்க்கப்படுகிறது என்று இந்த வங்கியால் வெளியிடப்பட்ட சமீபத்திய தரவு தெரிவிக்கிறது.

✓ இந்தியாவில், வளர்ச்சி வேகம் வலுவாக உள்ளது என்றும், ஏப்ரல் - ஜூன் மாதங்களில் முக்கிய பணவீக்கம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் இந்த நிதி நிறுவனம் தெரிவித்துள்ளது.

 044-24339436, 044-42867555, 9840226187

➢ **காலநிலை முதலீட்டுப் பட்டறை (Climate Investment Workshop)**




- ✓ பெருநகர சென்னை மாநகராட்சி, உலக வங்கியின் சர்வதேச நிதிக் கழகத்துடன் இணைந்து இரண்டு நாள் ‘அடிப்படை அளவீடுகளை அமைத்தல் மற்றும் திட்ட முதலீட்டுப் பட்டறையை’ நடத்துகிறது.
- ✓ கலைஞர் முத்தமிழறிஞர் மு. கருணாநிதி மாளிகையில் உள்ள ஆணையர் மாநாட்டு அரங்கில் பதன்கிழமை தொடங்கப்பட்ட இந்தப் பயிலரங்கம், சென்னைக்கான காலநிலை முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறியும் (Climate Investment Opportunities Diagnostic) முக்கிய படியாகும்.
- ✓ இந்த காலநிலை முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறிவதானது சென்னையின் காலநிலை மாற்ற செயல் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஆதரவாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

APOLLO STUDY CENTRE

# நியமனங்கள்

➢ **டாக்டர் மல்லிகா நட்டா**

✓ சிறப்பு ஒலிம்பிக் காரத் அமைப்பின் தலைவர் டாக்டர். மல்லிகா நட்டா, மூன்று ஆண்டுகளுக்கு சிறப்பு ஒலிம்பிக் ஆசிய பசிபிக் ஆலோசனைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.




✓ மல்லிகா நட்டா, பிலாஸ்பூரில் சேத்னா சன்ஸ்தா என்ற அமைப்பையும் நடத்தி வருகிறார்.

✓ சிறப்பு ஒலிம்பிக் ஆசிய பசிபிக் ஆலோசனைக் குழுவின் தலைவரான டாக்டர் மல்லிகா நட்டா 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஊனமுற்றோர் துறையில் பணியாற்றி வருவதால், 35 நாடுகளைப் பிரதிநித்துவப்படுத்துவார்.

➢ **கரீனா கபூர்**

✓ யூனிசெப் நிறுவனம், கரீனா கபூரை, இந்தியாவின் தேசிய தூதராக வரவேற்கிறது.




✓ பாலிவுட் நடிகை கரீனா கபூர் கான், யூனிசெப் இந்தியாவின் தேசிய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

✓ 2014ஆம் ஆண்டு முதல் அவர் ஒரு பிரபல வழக்கறிஞராக பணியாற்றிய நிறுவனத்துடனான அவரது நீண்ட கால தொடர்புக்கு அங்கீகாரமாக இந்த நியமனம் கிடைத்துள்ளது.

 044-24339436, 044-42867555, 9840226187

# விருதுகள்

- **‘பசுமை ஆஸ்கர்’ விட்லி தங்க விருது 2024**

✓ அஸ்ஸாமைச் சேர்ந்த வனவிலங்கு உயிரியலாளர் டாக்டர் பூர்ணிமா தேசி பர்மன் தனது இரண்டாவது விட்லி தங்க விருதை வென்றுள்ளார். இது பசுமை ஆஸ்கர் என்றும் அழைக்கப்படுகிறது.




✓ அழிந்துவரும் பறவையான ஹர்கிலா அல்லது கிரேட்டர் அட்ஜுடண்ட் ஸ்டோர்க்-ஐயும் அதன் ஈரநில வாழ்விடத்தையும் பாதுகாத்ததற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

✓ டாக்டர். பர்மனுக்கு விட்லி தங்க விருது வழங்கப்படுவது இது இரண்டாவது முறையாகும். அவர் இந்த விருதை 2017ஆம் ஆண்டிலும் பெற்றார்.

- **சர்வதேச செய்தித்தாள் வடிவமைப்புப் போட்டி**

✓ ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாக, newspaperdesign.in ஏற்பாடு செய்த சர்வதேச செய்தித்ததாள் வடிவமைப்புப் போட்டியில் தி இந்து மூன்று மதிப்புமிக்க விருதுகளைப் பெற்றது.




✓ நீரஜ் சோப்ராவின் குறிப்பிடத்தக்க பயணம் மற்றும் தடகளத்தில் அவரது வெற்றியை வெளிச்சம் போட்டுக் காட்டும், ‘நீரஜின் திறமைகளுக்குப் பின்னால் உள்ள அறிவியல்’ என்ற தலைப்பில், தி இந்து வெளியிட்ட விதிவிலக்கான விளக்கமளிக்கும் பக்கத்திற்காக இந்த பாராட்டு வழங்கப்படுகிறது.

- **சாகித்ய அகாடமி பெல்லோஷிப்**

✓ பிரபல எழுத்தாளர் ரஸ்கின் பாண்டுக்கு சாகித்ய அகாடமி பெல்லோஷிப் வழங்கப்பட்டுள்ளது.

- ✓ இவர் மே 19, 1934இல் இமாச்சலப் பிரதேசத்தின் கசௌலியில் பிறந்தார்.



- ✓ அவரது குறிப்பிடத்தக்க படைப்புகள் Vagrants in the Valley, Once Upon a Monsoon Time, Angry River, Strangers in the Night, All Roads Lead to Ganga, Tales of Fosterganj, Leopard on the Mountain and Too Much Troubl ஆகும்.
- ✓ அவர் 1999இல் பத்மஸ்ரீ மற்றும் 2019இல் பத்ம பூஷன் மற்றும் 2012இல் சாகித்ய அகாடமி பால் சாகித்ய புரஸ்கர் ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.


- ➢ **IN-SPACe நிறுவனம் Geospatial World Forum Leadership Award விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது**




- ✓ நெதர்லாந்தின் ரோட்டர்டாமில் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்வில், இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (The Indian National Space Promotion and Authorization Centre - **IN-SPACe**) 'பொதுக் கொள்கை: தொழில் வளர்ச்சியை செயல்படுத்துதல்' என்ற ஆராய்ச்சிக்காக ஜியோஸ்பேசியல் உலக மன்றம் தலைமைத்துவ விருதினைப் பெற்றுள்ளது.
- ✓ இந்திய விண்வெளித் துறையை முன்னேற்றுவதற்கும், அரசு சாரா நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் அந்நிறுவனம் மேற்கொண்ட முயற்சிகளை இந்த விருது அங்கீகரிக்கிறது.
- ✓ ஜியோஸ்பேசியல் உலக மன்ற தலைமைத்துவ விருதுகள் என்ற அமைப்பு 2007 முதல் உலகளாவிய ஜியோஸ்பேசியல் துறை புதுமை மற்றும் பங்களிப்புகளைப் பாராட்டுகிறது.

## ➢ வானியல் துறையில் ஷா பரிசு

- ✓ இந்திய வம்சாவளி அமெரிக்க விஞ்ஞானியும், சுதா மூர்த்தியின் சகோதரருமான ஸ்ரீனிவாசஸ் ஆர். குல்கர்னிக்கு 2024ஆம் அண்டிற்கான வானியல் துறையின் மதிப்பு மிக்க ஷா பரிசு வழங்கப்பட்டுள்ளது.




- ✓ குர்கா்னி, கால்டெக்கில் ஜார்ஜ் எல்லேரி ஹேல் வானியல் மற்றும் கிரக அறிவியல் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.
- ✓ மில்லி வினாடி பல்சர்கள், காமா கதிர் வெடிப்புகள், சூப்பர் நோவாக்கள் மற்றும் பிற நிலையற்ற வானியல் நிகழ்வுகள் பற்றிய அவரது கண்டுபிடிப்புகளுக்காக குர்கா்னிக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

## ➢ இங்கிலாந்தின் பெண்கள் அதிகாரமளித்தலுக்கான விருது

- ✓ உத்தரப்பிரதேசத்தின் பஹ்ரைச் மாவட்டத்தைச் சேர்ந்த 18 வயது பெண் இ-ரிக்ஷா ஓட்டுநரான ஆர்த்தி, இங்கிலாந்தின் மன்னா் மூன்றாம் சார்லசால், அமல் குளுனி மகளிா் அதிகாரமளிக்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.




- ✓ உத்தரப் பிரதேச அரசு 2020ஆம் ஆண்டில் மிஷன் சக்தியைத் தொடங்கியுள்ளது. இது மாநிலத்தின் பெண்களின் பாதுகாப்பு மற்றும் தன்னம்பிக்கை மூலம் பெண்களுக்கு அதிகாரமளிக்கிறது.
- ✓ இந்தத் திட்டம் பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை வழங்குவதையும், பயிற்சி மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களுக்கான அணுகலை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ 'All We Imagine As Light' கேன்சில் கிராண்ட் பிரிக்ஸ் பரிசை வென்றது

- ✓ 77வது கேன்ஸ் திரைப்பட விழாவில், நாட்டின் முதல் கிராண்ட் பிரிக்ஸ் விருதை வென்று இந்திய திரைப்படத் தயாரிப்பாளா் பயல் கபாடியா வரலாறு படைத்தார்.




- ✓ அவரது மலையாளம் - இந்தி திரைப்படமான ஆல் வி இமேஜின் அஸ் லைட் -இல் மும்பையில் பணிபுரியும் செவிலியர்களாக கனி குஸ்ருதி மற்றும் திவ்யா பிரபா ஆகியோர் நடித்துள்ளனர். இப்படத்தில் சாயா கதம் மற்றும் ஹிருது ஹாரூன் ஆகியோரும் நடித்துள்ளனர்.
- ✓ 1994ஆம் ஆண்டு கேன்சில் பாம் டி'ஓர் - விருதுக்காக போட்டியிட்ட ஷாஜி கருனின் ஸ்வாஹாம் படத்திற்குப் பிறகு, கபாடியாவின் இந்தத் திரைப்படம் 30 ஆண்டுகளில் மதிப்புமிக்க இந்தப் போட்டிப் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்திய திரைப்படமாக விளங்குகிறது.

➢ **ஐ.நா இராணுவ பாலின வழக்கறிஞர் விருது (UN Military Gender Advocate of the Year Award)**




- ✓ காங்கோ ஜனநாயகக் குடியரசில் (Mission in the Democratic Republic of the Congo) ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைப்படுத்துதல் பணியில் பணிபுரியும் இந்திய இராணுவ அமைதி காக்கும் வீரராகிய மேஜர் ராதிகா சென்னுக்கு, 2023ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகளின் இராணுவ பாலின வழக்கறிஞர் விருது வழங்கப்பட்டுள்ளது.
- ✓ பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம் 1325இன் கொள்கைகளை மேம்படுத்துவதில் அவரது அர்ப்பணிப்பு மற்றும் முயற்சிகளுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது.

# புகழ்பெற்ற நபர்கள்

- **நேபாள மலையேற்ற வீரர் ரீட்டர் ஷெர்பா**
- ✓ நேபாளி ஷெபா மலையேற்ற வீரர் கமி ரிட்டா 29வது முறையாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி தனது முந்தைய 28 சாதனைகளை முறியடித்துள்ளார்.




- ✓ 71 ஆண்டு கால மலை ஏற்ற வரலாற்றில் உலகின் மிக உயரமான சிகரத்தில் மிக அதிகமுறை ஏறி அவர் சாதனை படைத்துள்ளார்.
- ✓ கமி ரீட்டா ஷெர்பா 'எவரெஸ்ட் மனிதன்' என்று அழைக்கப்படுகிறார்.
- ✓ கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தின்படி, கமி ரீட்டா எவரெஸ்ட்டில் ஏறத் தொடங்கியதில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார். தற்போது வரை மொத்தமாக 29 தடவை அவர் ஏறியுள்ளார்.

- **காம்யா கார்த்திகேயன்**
- ✓ பதினாறு வயதான காம்யா கார்த்திகேயம் நேபாளத்தில் இருந்து எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய இளம் இந்திய மலையேற்ற வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இந்த சாதனையை நிகழ்த்திய உலகின் இரண்டாவது இளைய பெண் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.




- ✓ காம்யா, ஏழு கண்டங்களின் மிக உயரமான சிகரத்தை அடையும் தனது திட்டத்தில் ஆறு மைல்கற்களை நிறைவு செய்துள்ளார். இந்த டிசம்பரில் அண்டார்க்டிகாவில் உள்ள வின்சன் மாசி.ஃப் மலையில் ஏறி '7 உச்சிகள் சவாலை' நிறைவேற்றும் இளைய பெண்ணாக ஆக வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளார்.

- **ஜோதி ராத்ரே**

✓ மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த தொழில் முனைவோரும், உடற்பயிற்சி ஆர்வலருமான ஜோதி ராத்ரே, 55 வயதில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய மூத்த இந்தியப் பெண்மணியாக வரலாற்றில் தனது பெயரைப் பதிவு செய்துள்ளார்.




✓ மே 19, 2018 அன்று ‘எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய இந்தியாவின் மிக வயதான பெண்’ என்ற பட்டத்தை 53 வயதில் சங்கீதா பாஹல் பெற்று சரியாக ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, ராட்ரே உலகின் மிக உயரமான சிகரத்தின் உச்சியில் ஏறி சாதனை படைத்துள்ளார்.

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல்

## ➢ 6G ஒத்துழைப்பு

✓ இந்தியாவின் பாரத் 6ஜி ஒத்துழைப்பு அமைப்பு அமெரிக்காவுடன் மேற்கொண்ட இதேபோன்ற ஒப்பந்தத்தைப் போல, ஐரோப்பாவின் தொழில்துறை கூட்டணி 6ஜி உடன் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட உள்ளது.





✓ இந்தியாவின் தொலைத் தொடர்புத் துறையால் நிறுவப்பட்ட பாரத் ஜி அலையன்ஸ் என்ற நிறுவனம், தொழில்துறை வீரர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களை ஒன்றிணைத்து இந்தியாவில் 76ஜி தொழில்நுட்ப வளர்ச்சியை இயக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியம் போன்ற சர்வதேச நிறுனங்களில் பாரத் 6ஜி அலையன்ஸ் நிறுவனம் பங்கேற்பது, 6ஜி தொழில்நுட்பத்திற்கான உலகளாவிய தரநிலைகளை அமைப்பதில் இந்தியாவின் திறனை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

APPOLO STUDY CENTRE

## ➢ பாட்டிலிப்ஸ் சந்திரயாணி (Batillipes chandrayaani)

✓ புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட டார்டிகிரேட் இனத்திற்கு சந்திரயான் 3 திட்டத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. தமிழகக் கடலோரப் பகுதியில் புதிய கடல்சார் டார்டிகிரேட் இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



✓ சந்திரயான் -3 நிலவுப் பயணத்திற்குப் பிறகு இது கண்டுபிடிக்கப்பட்டதால், ஆராய்ச்சியாளர்கள் இதற்கு 'பாடிலிப்ஸ் சந்திரயாணி' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

✓ இந்த டார்டிகிரேடுகள் பொதுவாக 'நீர்க் கரடிகள்' என்று அழைக்கப்படுகின்றன. இவை நுண்ணிய அற்புதங்கள் ஆகும்.

- **கிளிப்டோதோராக்ஸ் புண்யபிரதை (Glyptothorax punyabratai)**
- ✓ சமீபத்தின் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் - மீன்மரபணு வளங்களின் தேசிய பணியகம் (ICAR-NBFGR), இந்தியாவின் அருணாச்சலப் பிரதேசத்தின் அழகிய நீரில் ஒரு புதிய கெளுத்திமீன் (கேட்ஃபிஷ்) இனத்தைக் கண்டுபிடித்து, அதற்கு கிளிப்டோரோக்ஸ் புண்யபிரதை என்று பெயரிட்டுள்ளது.




- ✓ பிரம்மபுத்திரா நதிப் படுகையில் உள்ள திஸ்ஸா நதியின் துணை நதியான துங் நீரோடையிலிருந்து இந்த இனம் சேகரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு புதிய கெளுத்திமீன் இனமாகும்.
- ✓ கேட்ஃபிஷ் என்பது நன்னீர் மீன்களின் மிகப் பெரிய குழுக்களின் ஒன்றாகும். இதில் 2000க்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன.
- ✓ பெரும்பாலான கெளுத்தி மீன்கள் நன்னீரில் காணப்படுகின்றன. ஆனால், சில கடலில் காணப்படுகின்றன. பெரும்பாலான கெளுத்தி மீன்கள் இரவு நேரத்தில் உலாவுபவை. கெளுத்தி மீன்கள் முதன்மையாக பெந்திக் அல்லது அடிமட்டத்தில் வசிப்பவையாக உள்ளன.

- **திரவ ஆக்சிஜன் மண்ணெண்ணெயைப் பயன்படுத்தி, அரை கிரையோ ஜெனிக் இயந்திரத்தை இஸ்ரோ உருவாககியுள்ளது.**



- ✓ இஸ்ரோ, மற்ற ஏவுகணை வாகன மையங்களின் ஆதரவுடன் திரவ உந்துவிசை அமைப்பு மையங்கள் மூலம், செமி கிரையோஜெனிக் அமைப்பை மேம்படுத்தி வருகிறது.
- ✓ திரவ ஆக்சிஜன் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் கலவையால் இயங்கும் 2000 கேஎன் த்ரஸ்ட் செமி கிரையோஜெனிக் இயந்திரத்தைப் பயன்படுத்தி, செலுத்து வாகனம் மாக் -3 (Launch Vehicle Mark-3) மற்றும் எதிர்கால ஏவுகணை வாகனங்களின் பேலோட் திறனை மேம்படுத்துவதை இந்த அமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **தீவிர சூரியப் புயல் பூமியைத் தாக்க உள்ளது**
  - ✓ மே 11, 2024 அன்று, பூமியானது இரண்டு தசாப்தங்களில் அதன் மிக முக்கியமான சூரியப் புயலை எதிர்கொண்டது.




  - ✓ சூரியனில் இருந்து பல கரோனல் மாஸ் உமிழ்வுகளால் (multiple coronal mass ejections) தூண்டப்பட்ட இந்த புயல், தகவல் தொடர்பு நெட்வொர்க்குகள், செயற்கைக் கோள் செயல்பாடுகள் மற்றும் மின் நிலையங்களில் அதன் சக்தி வாய்ந்த தாக்கத்தின் காரணமாக உலக அளவில் சலசலப்பை ஏற்படுத்தியது.
  - ✓ இது டாஸ்மேனியாவிலிருந்து பிரிட்டன் வரை பரவியிருக்கும் திகைப்பூட்டும் அரோராக்களின் வடிவத்திலும் காணப்பட்டது.
  - ✓ சூரியனின் மொத்த உமிழ்வுகள் (Coronal Mass Ejections) என்பவை சூரியக் காற்று மற்றும் காந்தப்புலங்களின் பெரிய வெடிப்புகள் ஆகும். இவை சூரிய கரோனாவுக்கு மேலே உயரும் அல்லது விண்வெளியில் வெளியிடப்படும்.

- **புதிய திரவ ராக்கெட் எஞ்சின்**
  - ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் சேர்க்கை உற்பத்தி தொழில்நுட்பத்தின்மூலம் தயாரிக்கப்பட்ட புதிய திரவ ராக்கெட் இயந்திரத்தை வெற்றிகரமாக சோதனை செய்தது




  - ✓ தமிழகத்தில் உள்ள மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ உந்துவிசை வளாகத்தில் இந்த சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
  - ✓ மறுவடிவமைப்பு செய்யப்பட்ட இந்த புதிய பிஎஸ்4 எஞ்சின் பாகங்களின் எண்ணிக்கையை 14ல் இருந்து ஒன்றாகக் குறைத்ததுடன், பற்ற வைப்பு செய்யப்பட்ட 19 இணைப்புகளை வெளியிட்டது.
  - ✓ இது ஒரு இயந்திரத்தின் மூலப்பொருளின் பயன்பாட்டைக் கணிசமாக மிச்சப்படுத்தி, உலோகத்தூளை 565 கிலோவிலிருந்து 13.7 கிலோவாகக் குறைத்து. உற்பத்தி நேரத்தை 60 விழுக்காடு குறைக்கும்.

- ✓ இஸ்ரோ இந்த பிஎஸ்4 எஞ்சினை வழக்கமான பிஎஸ்எல்வி திட்டத்தில் சேர்க்கத் திட்டமிட்டுள்ளது.

## ➢ டெட்போட்ஸ் (Deadbots)

- ✓ இறந்த அன்புக்குரியவர்களைப் பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட 'டெட்போட்ஸ்' என்று அழைக்கப்படும் செயற்கை நுண்ணறிவு சாடபோட்களின் வளர்ச்சியில் எச்சரிக்கையாக இருக்க வெண்டும் என்று ஒரு புதிய ஆய்வு வலியுறுத்துகிறது.



- ✓ இந்த டெட்போட்கள் துன்ப போட்கள் (griefbots) என்றும் அழைக்கப்படுகின்றன. இவை செயற்கை நுண்ணறிவு செயல்படுத்தப்பட்ட பிரிந்த அன்புக்குரியவர்களின் டிஜிட்டல் மாதிரிகளாகும்.
- ✓ இந்த சாட்போட்கள் அவர்களின் மொழி வடிவங்கள் மற்றும் ஆளுமைப் பண்புகளை உருவகப்படுத்தி, அவர்களின் ஆளுமையைப் பிரதிபலிக்கும் செயற்கை நுண்ணறிவு உரையாடல்களை உருவாக்குகின்றன.
- ✓ இந்த சாட்போட்கள், ஆறுதல் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டாலும், பாதுகாப்பை மனதில் கொண்டு வடிவமைக்கப்படாவிட்டால், உளவியல் ரீதியான துயரங்களுக்கு வழிவகுக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

## ➢ சந்திரனில் முதல் இரயில் அமைப்பை உருவாக்கும் திட்டத்தை நாசா அறிவித்துள்ளது

- ✓ சந்திரனில் பேலோட் போக்குவரத்தில் புரட்சியை ஏற்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட FLOAT (Flexible Levitation on a Track) எனப்படும் முதல் சந்திர இரயில் அமைப்பை உருவாக்குவதற்கான அதன் இலட்சிய திட்டத்தை நாசா வெளியிட்டுள்ளது.




- ✓ இந்தப் புதுமையான அமைப்பு, நாசாவின் சந்திரன் முதல் செவ்வாய் வரையிலான முன் முயற்சி மற்றும் ரோபோட்டிக் லூனார் சர்∴பேஸ் ஆபரேஷன்ஸ் 2 (Robotic Lunar Surface Operations 2) போன்ற பணித் திட்டங்களுடன் ஒரு நிலையான சந்திர தளத்தின்

தினசரி செயல்பாடுகளுக்கு அவசியமான, நம்பகமான, தன்னாட்சி மற்றும் திறமையான பொக்குவரத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **ஆசியா பசிபிக் பிராந்தியத்தில் மிக உயர்ந்த தரவு மையத் திறன்**
- ✓ இந்தியா, தரவு மைய திறனில் ஆஸ்திரேலியா். ஜப்பான் மற்றும் சிங்கப்பூரை முந்தியுள்ளது.



- ✓ ஆஸ்திரேலியா், ஹாங்காங் எஸ்ஏஆர், ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் கொரியா போன்ற முக்கிய நாடுகளை விஞ்சி, ஆசியா – பசிபிக் பிராந்தியத்தில் அதிக தரவு மைய திறன் கொண்ட நாடாக இந்தியா மாறியுள்ளது.
- ✓ 2024-26 காலகட்டத்தில் நாடு 850 மெகாவாட் திறனை கூடுதலாகப் பதிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது பெரிய ஆசியா பசிபிக் பிராந்திய நாடுகளை விட அதிகமாகும்.
- ✓ 2023ஆம் ஆண்டில், 255 மெகாவாட் புதிய விநியோகம் கூடுதலாக இருந்தது. இதன் விளைவாக ஆண்டு இறுதிக்குள் மொத்த கையிருப்பு சமார் 1,030 மெகாவாட் ஆகும்.

- **மங்கள்யான்-2 வெளியிடப்பட்டது**
- ✓ செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கும் மூன்றாவது நாடாக இந்தியா மாற உள்ளது.



- ✓ செவ்வாய் கிரகத்தில் ரோவர் மற்றும் ஒரு ஹெலிகாப்டரை தரையிறக்கும் ஒரு முக்கிய பணிக்கு இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தயாராகி வருகிறது.
- ✓ மங்கள்யான்-2 என்று பெயரிடப்பட்ட இந்த வரலாற்று முயற்சியானது. கிரகங்களுக்கு இடையேயான ஆய்வில் முக்கிய பங்கு வகிக்கும் நாடுகளில் அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு இணையாக இந்தியாவை வைக்க முயல்கிறது.
- ✓ தேசிய தொழில்நுட்ப தினத்தன்று விண்வெளி பயன்பாட்டு மையத்தில் நடைபெற்ற விளக்கக் காட்சியின்போது இந்தத் திட்டம் வெளியிடப்பட்டது.

➢ **இந்தியா ஏஐ பணி (IndiaAI Mission)**

✓ இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு கண்டுபிடிப்பு சுற்றுச் சூழலை வலுப்படுத்தும் நோக்கில், இந்தியாஏஐ பணிக்காக ரூ.10,300 கோடிக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டை ஒன்றிய அமைச்சரவை அனுமதித்துள்ளது.




✓ அரசு-தனியார் கூட்டாண்மை மாதிரியால் வழிநடத்தப்படும், இந்தக் குறிப்பிடத்தக்க முதலீடானது, கணக்கீட்டு உள்கட்டமைப்பு விரிவாக்கம், தொடக்க அதிகாரமளித்தல் மற்றும் நெறிமுறை செயற்கை நுண்ணறிவு வரிசைப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு மூலோபாய முயற்சிகளை ஊக்குவிக்கத் தயாராக உள்ளது.

✓ இந்தியாஏஐ பணியின் ஒரு முக்கிய அங்கமான, இந்தியாஏஐ கம்பியூட் கெப்பாசிட்டி திட்டம், ஒரு அதிநவீன, அளவிடக்கூடிய செயற்கை நுண்ணறிவு கணக்கிடுதல் உள்கட்டமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

➢ **நீல தொடக்கத்தின் என்எஸ்-25 பணி (Blue Origin's NS-25 Mission)**

✓ பூமியின் வளிமண்டலத்திற்கு அப்பால் ஒரு பயணத்தைத் தொடங்கிய முதல் இந்தியராகிய இந்திய வெளிநாட்டவர் கோபி தோட்டகுரா விண்வெளி ஆய்வாளர்களின் வரிசையில் சேர்ந்தார்.



✓ ஜெ.ஃப் பெசோஸின் ப்ளு ஆரிசின் திட்டத்தின் (Jeff Bezos's Blue Origin program) ஒரு பகுதியான என்எஸ்-25 பணி, மேற்கு டெக்சாசில் உள்ள ஒரு தனியார் பண்ணையிலிருந்து நியூ ஷெப்ப்ட் விண்ணகத்தில் தோட்டகுரா மற்றும் ஐந்து குழு உறுப்பினர்களை மேலேற்றியது.

✓ இந்தக்குழுவினரில் எட் ட்வைட்டும் இருந்தார். இதன்மூலம் ஒரு கருப்பு விண்வெளி வீரர் விண்வெளிக்குச் சென்றது இதுவே முதல் முறையாகும்.

- ✓ கோபிசந்த் தோட்டகுரா: இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒரு தொழிலதிபர் மற்றும் விமானி ஆவார். தோட்டகுரா என்எஸ்-25 பணிக்கான ஆறு பணியாளர்களுடன் தனது இடத்தைப் பெற்றார்.

## ➢ ரெமல் சூறாவளி (Cyclone Remal)

- ✓ வங்காள விரிகுடாவில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் ரெமல் புயலாக வலுப்பெற்று வங்காளதேசம் மற்றும் அதை ஒட்டிய மேற்கு வங்க கடலோரப் பகுதிகளை சென்றடைந்தது.



- ✓ இந்திய வானிலை ஆய்வ மையம், இந்தப் புயலின் முன்னேற்த்தை முன்கூட்டியே கணித்தது. மே 25 காலைக்குள் இது கடுமையான சூறாவளிப் புயலாக மாறும் என்றும், மே 26 மாலைக்குள் மேற்கு வங்காளத்தில் உள்ள சாகர் தீவிற்கும் வங்காளதேசத்தில் உள்ள கெபுபாராவிற்கும் இடையே கரையை கடக்கும் என்றும் கணித்தது.

## ➢ செற்கை நுண்ணறிவு அறிவிப்பாளர்கள் கிரிஷ் மற்றும் பூமி

- ✓ தூர்தர்ஷன் கிசான் (டிடி கிசான்) செயற்கை நுண்ணறிவு கிரிஷ் மற்றும் செயற்கை நுண்ணறிவு பூமி ஆகிய இரண்டு செயற்கை நுண்ணறிவு அறிவிப்பாளர்களை அறிமுகப்படுத்தும் நாட்டின் முதல் அரசு தொலைக்காட்சி சேனலாக மாற உள்ளது.



- ✓ டிடி கிசான் மே 26 ஆம் தேதி இந்திய விவசாயிகள் மத்தியில் புதிய தோற்றம் மற்றும் புதிய பாணியுடன் வரவுள்ளதாக வேளாண் அமைச்சகம் தெரிவித்தது. அங்கு இந்தச் சேனலில் விளக்கக் காட்சி புதிய அவதாரத்தில் இருக்கும்.
- ✓ செயற்கை நுண்ணறிவு அறிவிப்பாளர்கள் ஐம்பது மொழிகளில் பேசுவார்கள் என்றும், 24 மணி நேரமும் 365 நாட்களும் சோர்வின்றி செய்திகளைப் படிக்க முடியும் என்றும் அந்த அறிவிப்பு தெரிவித்தது. நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் இந்த செய்தி வழங்குநர்களை பார்வையாளர்கள் காண முடியும்.

- ✓ இந்த செயற்கை நுண்ணறிவு அறிவிப்பாளர்கள், நாடு மற்றும் உலக அளவில் விவசாய ஆராய்ச்சிகள், வேளாண் மண்டிகளின் போக்குகள், வானிலை மாற்றங்கள் மற்றும் அரசின் திட்டங்கள் பற்றி தேவையான தகவல்களை வழங்குவர்.

### ➢ ஓடோகிளாடியம் சயாட்ரிகம் (Oedocladium sahyadricum)

- ✓ பத்தனம்திட்டாவில் உள்ள கத்தோலிக்கேட் கல்லூரியின் தாவரவியல் துறையைச் சேர்ந்த தாவரவியல் நிபுணர்கள் குழு மேற்கு தொடர்ச்சி மலையில் புதிய பாசி இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.



- ✓ Oedocladium sahyadricum என்பது ஒரு புதிய பாசி இனம் ஆகும்.
- ✓ 'சயாட்ரிகம்' என்ற பெயர் மேற்கு தொடர்ச்சி மலையைக் குறிக்கிறது. இது சஹ்யாத்ரி என்றும் அழைக்கப்படுகிறது. இது தாவர பன்முகத் தன்மை நிறைந்தது மற்றும் நிலப்பரப்பு நுண்ணுயிரிகளின் வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலைகளை வழங்குகிறது.
- ✓ ஈரமான மண்ணில் நீளமான இழைகளின் மெல்லிய பாயாக, இந்தப் பாசிகாணப்பட்டது.

### ➢ அக்னிகுல் காஸ்மோசின் அக்னிபான் - உலகின் முதல் முப்பரிமானம் அச்சிடப்பட்ட விண்வெளி ராக்கெட் எஞ்சின் (Agnikul Cosmos' Agnibaan – World's First 3D Printed Space Rocket Engine)

- ✓ சென்னையைச் சேர்ந்த அக்னிகுல் காஸ்மோஸ் என்ற புத்தொழில் நிறுவனம் உலகின் முதல் விண்வெளி ராக்கெட்டை ஒற்றைத் துண்டு முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட இயந்திரத்துடன் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி குறிப்பிடத்தக்க சாதனையை நிகழ்த்தியுள்ளது.



- ✓ நான்குமுறை தோல்வி முயற்சிகளுக்குப் பிறகு, அக்னிகுல் தனது ஐந்தாவது முயற்சியில் வெற்றி பெற்றது. அக்னிபான் என்று பெயரிடப்பட்ட தனது சொந்த ராக்கெட்டை விண்ணில்செலுத்தியது.
- ✓ இந்த ஏவுதல் இந்தியாவின் முதல் அரை-கிரையோஜெனிக் இயந்திரத்தால் இயங்கும் ராக்கெட்டைக் குறிக்கிறது. இது முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டது.

# விளையாட்டுகள்

- **தமிழ்நாட்டைச் சேர்ந்த ஷியாம் நிகில் இந்தியாவின் 85வது செஸ் கிராண்ட் மாஸ்டர் ஆனார்.**
- ✓ ஐ.எம்.பி. ஷியாம் நிகில், துபாய் போலீஸ் மாஸ்டர்ஸ் 2024ல் கிராண்ட் மாஸ்டர்ஸ் பட்டத்தை வென்ற 85வது இந்தியர் ஆனார்.




- ✓ இந்த 31 வயது வீரர், இந்த உயரத்தை எட்டிய நாட்டின் 85வது வீரர் ஆனார்.
- ✓ ஆர். வைஷாலி இந்தியாவின் 84வது கிரர்ணட் மாஸ்டர் ஆவார்.

- **தீப்தி ஜீவன்ஜி உலக சாதனையை முறியடித்தார்**
- ✓ இருபது வயதான தீப்தி ஜீவன்ஜி, ஜப்பானில் உள்ள கோப்-இல் நடைபெற்ற உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான 400 மீட்டர் டி20 போட்டியில் உலக சாதனையை முறியடித்து தனது முதல் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.




- ✓ தீப்தி 55.07 வினாடிகளில் போட்டியை வென்று, கடந்த ஆண்டு பாரிசில் நடைபெற்ற சாம்பியன்ஷிப் போட்டியின்போது, அமெரிக்கரான ப்ரீனா கிளார்க்கின் முந்தைய உலக சாதனையான 55.12 வினாடிகளை முறியடித்தார்.
- ✓ இந்த டி20 வகைப்பாடு, அறிவுசார் குறைபாடு உள்ள விளையாட்டு வீரர்களுக்கானது ஆகும்.

- **உலக பாரா தடகளப் போட்டிகள்**
- ✓ உலக பாரா தடகளப் போட்டியில் உயரம் தாண்டுதலில் மாரியப்பன் தங்கவேல, தங்கம் வென்று சாம்பியன்ஷிப் சாதனையை முறியடித்தார்.




- ✓ டோக்கியோ பாராலிம்பிக்ஸ் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தங்கவேலு மாரியப்பன் டி63 உயரம் தாண்டுதல் போட்டியில் உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் சாதனையுடன் 1.88 மீட்டர் தாண்டி தங்கப்பதக்கம் வென்றார்.
- ✓ கடந்த எட்டு ஆண்டுகளில் ஒரு பெரிய போட்டியில் அவர் தங்கம் வெல்வது இதுவே முதல் முறையாகும்.
- ✓ 28 வயதான மாரியப்பன் 2016 ரியோ பாராலிம்பிக்ஸ் போட்டியல் டி42 உயரம் தாண்டுதலில் தங்கப்பதக்கமும், 2021 டோக்கியோ பதிப்பில் டி63ல் வெள்ளிப் பதக்கமும் வென்றார்.
- ✓ டி63 வகைப்பாடு என்பது ஒற்றை முதல் முழங்கால் அல்லது அதற்கு மேல் மூட்டு குறைபாடு உள்ள விளையாட்டு வீரர்கள் செயற்கை உறுப்புகளுடன் போட்டியிடுவதாகும்.

➢ **தீபா கர்மாகர் (Dipa Karmakar)**

- ✓ தீபா கர்மாகர், உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் நடைபெற்ற ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் முதல்தங்கப் பதக்கத்தை வென்று வரலாறு படைத்தார்.




- ✓ 30 வயதான இந்த ஒலிம்பிக் வீராங்கனை, பெண்களுக்கான வால்ட் இறுதிப் போட்டியில் சராசரியாக 13.566 புள்ளிகளைப் பதிவு செய்தார்.
- ✓ இந்திய ஜிம்னாஸ்டிக் வீராங்கனை ஒருவர், ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வெல்வது இதுவே முதல் முறை ஆகும்.

# அறிக்கைகள்

➢ **உலகளாவிய மின்சார ஆய்வறிக்கை (Global Electricity Review)**

✓ உலகளாவிய ஆற்றல் சிந்தனையாளர் குழுவான எம்பர், ஒரு புதிய அறிக்கையை வெளியிட்டது. அதன்படி 2023இல் இந்தியா, ஜப்பானை விஞ்சி உலகின் மூன்றாவது பெரிய சூரிய சக்தி உற்பத்தியாளராக விளங்கியது.




✓ இந்த அறிக்கையின்படி, 2015இல் இந்தியாவின் சூரிய ஆற்றல் தரவரிசை ஒன்பதாவது இடத்தில் இருந்தது.

✓ 2023ஆம் ஆண்டில், உலக மின்சாரத்தில் 5.5 விழுக்காடை சூரிய ஆற்றல் உருவாக்கியது.

✓ எம்பரின் 'உலகளாவிய மின்சார ஆய்வறிக்கை'யின்படி, முந்தைய ஆண்டில் இந்தியாவின் மின்சாரத்தில் 5.8 விழுக்காடு சூரிய சக்தியில் இருந்த உற்பத்தி செய்யப்பட்டது.

✓ 2023இல், இது உலக அளவில் நிலக்கரி மின்சாரத்தைவிட இரண்டு மடங்கு புதிய மின்சாரத்தை உற்பத்தி செய்தது.

✓ 2023ஆம் ஆண்டின் உலகளாவிய சூரிய உற்பத்தி வளர்ச்சியின் அடிப்படையில், இந்திய நான்காவது இடத்தைப் பிடித்தது (+18 டெராவாட் மணி நேரம் அல்லது TWh).

➢ **பணக்கார நகரங்கள் அறிக்கை 2024 (Wealthiest Cities Report 2024)**

✓ ஹென்லி மற்றும் பார்ட்னர்கள் அறிக்கையின்படி, மும்பையும், டெல்லியும் உலகின் 50 பணக்கார நகரங்களில் இடம் பிடித்துள்ளன.




✓ இந்தியாவின் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு சான்றாக, ஹென்லி மற்றும் பார்ட்னர்கள் மற்றும் நியூ வேர்ல்ட் வெல்த் ஆகியவற்றின் செல்வந்த நகரங்கள் அறிக்கை 2024இன்படி, மும்பை மற்றும் டெல்லி உலக அளவில் முதல் 50 பணக்கார நகரங்களில் இடம் பெற்றுள்ளன.

- ✓ இந்தப் பட்டியலில் மும்பை 24வது இடத்தையும், டெல்லி 37வது இடத்தையும் பிடித்தன.

- ➢ **கங்கை டால்பின்கள்**
- ✓ இந்திய வனவிலங்கு நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, கங்கை நதிப்படுகையில் 4000க்கும் மேற்பட்ட கங்கை டால்பின்கள் உள்ளன.



- ✓ இவற்றில் 2000க்கும் மேற்பட்டவை உத்தரப் பிரதேசத்தில் முதன்மையாக சம்பல் நதியில் காணப்படுகின்றன.
- ✓ நிதியின் மாசு அளவுகள் குறைந்து வருவதையும், அரசின் பாதுகாப்பு முயற்சிகள் பயனுள்ளதாக இருப்பதையும் இந்த அதிகரிப்பு காட்டுகிறது. குருட்டு டால்பின், கங்கேஸ் சூசு அல்லது ஹிஹு என்றும் அழைக்கப்படும் இந்த கங்கை நதி டால்பின், பிளாடனிஸ்டா கங்கேடிகா (**Platanista gangetica**) என்ற அறிவியல் பெயரைக் கொண்டுள்ளது.
- ✓ வரலாற்று ரீதியாக கங்கா – பிரம்மபுத்ரா – மேக்னா மற்றும் கர்ணபுலி – சங்கு நதி அமைப்புகளில் காணப்பட்ட டால்பின்கள், தற்போது இந்தியாவில் உள்ள கங்கா – பிரம்மபுத்ரா – பாரக் நதி அமைப்பின் குறிப்பிட்ட பகுதிகளிலும், நேபாளம் மற்றும் வங்காளதேசத்தில் உள்ள நதி அமைப்புகளிலும் உள்ளன.

# தரவரிசைப்பட்டியல்

➢ **உலக பத்திரிகை சுதந்திரக் குறியீடு**

✓ உலக பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில், 180 நாடுகளில் பாகிஸ்தானுக்குக் கீழே 159 வது இடத்தில் இந்தியா உள்ளது.




✓ எல்லையில்லாத பத்திரிகையாளர்கள் (Reporters Without Borders) (பிரெஞ்சு மொழியில் Reporters sans frontières என்பதன் சுருக்கம்) என்ற ஒரு சர்வதேச இலாப நோக்கமற்ற அமைப்பு, சமீபத்திய ஆண்டு உலக பத்திரிகை சுதந்திரக் குறியீட்டை வெளியிட்டுள்ளது.

✓ 180 நாடுகளின் பட்டியலில் இந்தியா 159வது இடத்தில் உள்ளது. 2023ஆம் ஆண்டு பட்டியில் இந்தியா 161வது இடத்தில் இருந்தது)

✓ இருப்பினும், பாகிஸ்தான் 152வது இடத்தில் உள்ளது. இது 2023இல் 150வது இடத்தில் இருந்த இந்தியாவை விட ஏழு இடங்கள் மேலே உள்ளதைக் குறிப்பிடுகிறது.

✓ நார்வே, டென்மார்க் மற்றும் ஸ்வீடன் ஆகியவை உலக பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில் முறையே 1, 2 மற்றும் 3வது இடத்தைப் பிடித்துள்ளன.

➢ **உலகப் பொருளாதார மண்றத்தின் பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீடு 2024** (WEF **Travel & Tourism Development Index 2024)**


✓ உலகப் பொருளாதார மன்றத்தின் பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீடு 2024இல் இந்தியா, 39வது இடத்திற்கு உயர்ந்துள்ளது.



- ✓ உலகப் பொருளாதார மன்றத்தின் பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீடு 2024இல் இந்தியா 39வது இடத்திற்கு உயர்ந்துள்ளது. இது 2021இல் அதன் 54வது இடத்தில் இருந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.
- ✓ இந்தப் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் இருந்தபோதிலும், தெற்காசியாவிலும், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட பொருளாதார நாடுகளிலும் இந்தியா மிக உயர்ந்த இடத்தில் உள்ளது என்று உலகப் பொருளாதார மன்றம் தெரிவித்துள்ளது.
- ✓ பெருந்தொற்றினால் சவால்கள் ஏற்பட்டிருந்தபோதிலும், இந்தியா அதன் பயணம் மற்றும் சுற்றுலாத் துறையின் பல்வேறு அம்சங்களில் நெகிழ்ச்சி மற்றும் போட்டித் தன்மையைக் காட்டுகிறது.

➢ **ஆக்ஸ்போர்டு பொருளாதாரம் உலகளாவிய நகரங்களின் குறியீட்டறிக்கை 2024 (Oxford Economics Global Cities Index Report 2024)**

- ✓ 2024ஆம் ஆண்டுக்கான ஆக்ஸ்போர்டு பொருளாதார உலக நகரங்கள் குறியீட்டில் டெல்லி 350வது இடத்தைப் பிடித்துள்ளது. இது இந்திய நகரங்களில் மிக உயர்ந்த இடமாகும். இந்தத் தரவரிசையானது உலகின் 1000 நகரங்களை ஒப்பிடுகிறது.




- ✓ இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப மையமான பெங்களூரு, நாட்டின் நிதித் தலைநகரான மும்பையைவிட உயர்ந்து 411வது இடத்தில் உள்ளது. மும்பையின் தரவரிசை 427 ஆகும்.
- ✓ அதே சமயம், உத்தரப் பிரதேசத்தின் சுல்தான்பூர், இந்தக் குறியீட்டில் 1000வது இடத்தில் அதாவது கடைசி இடத்தில் உள்ளது.
- ✓ நியூயார்க் 100 மதிப்பெண்களுடன் ஐந்து பிரிவுகளிலும் உயர்ந்த தர வரிசையை அடைந்தது. அதைத் தொடர்ந்து லண்டன் மற்றும் சான் ஜோஸ் முறையே 2வது மற்றும் 3வது இடங்களைப் பெற்றன.

# முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | மையக்கருத்து |
|---|---|---|
| **மே 01** | **சர்வதேச தொழிலாளர் தினம்** | மாறிவரும் காலநிலையில், பணியில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை உறுதி செய்வதில் இந்த ஆண்டு கவனம் செலுத்தப்படுகிறது. |
| **மே 02** | **உலக டுனா தினம்** | 2024ஆம் ஆண்டு உலக டுனா தினத்தின் முக்கிய கவனம் அதிகப்படியாக மீன்பிடித்தல் மற்றும் அவற்றைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் ஆகியவற்றில் உள்ளது. |
| **மே 03** | **உலக பத்திரிகை சுதந்திர தினம்** | 2024ஆம் ஆண்டிற்கான கருப்பொருள், 'கிரகத்திற்கான ஒரு செய்தி: சுற்றுச் சூழல் நெருக்கடியின் பின்னணியில் பத்திரிக்கை' |
| **மே 04** | **சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம்** | எல்லா இடங்களிலும் தீயணைப்பு வீரர்களின் அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தை அங்கீகரிக்கும் இந்த நாள் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. |
| **மே 04** | **நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் தினம்** | களத்தில் வேலை செய்யும் சுரங்கத் தொழிலாளர்களுக்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. |
| **மே 05** | **உலக சிரிப்பு தினம்** | 'ஒன்றாக சிரித்தல், ஒன்றாக குணமடைதல்' என்பது இந்த ஆண்டின் கருப்பொருள் ஆகும். |
| **மே 06** | **சர்வதேச உணவுமுறை இல்லாத தினம்** | இந்த ஆண்டின் கருப்பொருள், 'உங்களைத் தழுவிக்கொள்ளுங்கள், உணவுக் கலாச்சாரத்தை நிராகரியுங்கள், உங்களை நேசியுங்கள்' என்பதாகும். |
| **மே 07** | **உலக ஆஸ்துமா தினம்** | மையக்கருத்து, 'ஆஸ்துமா கல்வி அதிகாரமளிக்கிறது' |
| **மே 07** | **உலக தடகள தினம்** | இந்த ஆண்டு உலக தடகள தினத்தின் மையக்கருத்து, 'உலக மைல் சவால்' என்பதாகும். |
| **மே 08** | **உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினம்** | இந்த ஆண்டு உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினத்தின் கருப்பொருள், 'மனிதகுலத்தை வாழ வைத்தல்' என்பதாகும். |

APOLLO STUDY CENTRE

| | | |
|---|---|---|
| **மே 08** | **உலக தலசீமியா தினம்** | இந்த ஆண்டின் கருப்பொருள், 'வாழ்க்கையை மேம்படுத்துதல், முன்னேற்றத்தைத் தழுவுதல்: அனைவருக்கும் சமமான மற்றும் அணுகக் கூடிய தலசீமியா சிகிச்சை' என்பதாகும். |
| **மே 11** | **உலக இடம் பெயர் பறவைகள் தினம்** | 2024 உலக இடம் பெயர் பறவைகள் தினத்தின் மையக் கருத்து, 'பூச்சிகள்' ஆகும். |
| **மே 11** | **தேசிய தொழில்நுட்ப தினம்** | 2024ஆம் ஆண்டிற்கான கருப்பொருள், 'பள்ளி முதல் புத்தொழில்கள் வரை – புதுமைப்படுத்துவதற்கு இளம் மனங்களைத் தூண்டுதல்' என்பதாகும். |
| **மே 12** | **சர்வதேச செவிலியர் தினம்** | நமது செவிலியர்கள் - நமது எதிர்காலம். பாதுகாப்பின் பொருளாதார சக்தி. |
| **மே 12** | **சர்வதேச அன்னையர்தினம்** | |
| **மே 12** | **சர்வதேச தாவர சுகாதார தினம்** | 2024 மையக் கருத்து – 'தாவர சுகாதாரம், பாதுகாப்பான வர்த்தகம், டிஜிட்டல் தொழில்நுட்பம்' என்பதாகும். |
| **மே 15** | **சர்வதேச குடும்ப தினம்** | பன்முகத்தை ஏற்றுக் கொள்ளுதல், குடும்பங்களை வலுப்படுத்துதல். |
| **மே 16** | **சர்வதேச சமாதானத்தில் ஒன்றாக வாழும் தினம்** | உலக மக்கள் அமைதியின் முக்கியத்துவத்தையும், அமைதியுடன் ஒன்றாக வாழ்வதையும் உணர்த்தும் வகையில் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| **மே 16** | **சர்வதேச ஒளி தினம்** | மையக் கருத்து, 'நம் வாழ்வில் ஒளி, ஒளி நம்மை முன்னோக்கி வழிநடத்தட்டும்'. |
| **மே 17** | **உலக தொலைத் தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம்** | மையக் கருத்து, 'நிலையான வளர்ச்சிக்கான டிஜிட்டல் கண்டுபிடிப்பு' |
| **மே 17** | **உலக உயர் இரத்த அழுத்த தினம்** | இந்த ஆண்டின் கருப்பொருள், 'உங்கள் இரத்த அழுத்தத்தைத் துல்லியமாக அளவிடுங்கள், கட்டுப்படுத்துங்கள் மற்றும் நீண்ட காலம் வாழுங்கள்' என்பதாகும். |
| **மே 17** | **தேசிய அருகி வரும் நிலையில் உள்ள உயிரினங்கள் தினம்** | தேசிய அருகி வரும் உயிரினங்கள் தினம் 2024 இன் கருப்பொருள், 'அருகி வரும் இனங்களைக் |

| | | |
|---|---|---|
| | | கொண்டாடுதல்' என்பதாகும். |
| மே 17 | **சர்வதேச ஹோமோ.ஃ.போபியா, டிரான்ஸ்.ஃ.போபியா மற்றும் பை.ஃ.போபியாவுக்கு எதிரான சர்வதேச தினம்** | |
| மே 18 | **சர்வதேச அருங்காட்சியக தினம்** | இந்த ஆண்டின் கருப்பொருள், 'கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான அருங்காட்சியகங்கள்' |
| மே 18 | **உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம்** | இந்த ஆண்டின் கருப்பொருள், 'யாரையும் விட்டுச் செல்லவில்லை: அனைவருக்கும் சமத்துவம், சுத்நதிரம் மற்றும் நீதி' |
| மே 20 | **உலக தேனீ தினம்** | 2024 மையக் கருத்து, 'இளைஞர்களுடன் ஈடுபாட்டில் உள்ள தேீன' |
| மே 20 | **உலக அகதிகள் தினம்** | 2024 மையக் கருத்து. 'வீட்டுக்கு வெளியே நம்பிக்கை' |
| மே 20 | **உலக அளவியல் தினம்** | 2024 உலக அளவியல் தினத்தின் மையக் கருத்து, 'நிலைத்தன்மை' ஆகும். |
| மே 21 | **சர்வதேச தேயிலை தினம்** | |
| மே 21 | **தேசிய பங்கரவாத எதிர்ப்பு தினம்** | இந்த நாள், ராஜீவ் காந்தியை கௌரவிப்பதோடு, சமூகத்தில் பயங்கரவாதம் மற்றும் வன்முறையின் எதிர்மறையான விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| மே 22 | **உயிரியல் பன்முகத் தன்மைக்கான சர்வதேச தினம்** | 2024ஆம் ஆண்டிற்கான மையக்கருத்து, 'திட்டத்தின் ஒரு பகுதியாக இருங்கள்' என்பதாகும். |
| மே 23 | **உலக ஆமை தினம்** | 2024ஆம் ஆண்டின் உலக ஆமை தினத்தின் மையக் கருத்து, 'நாம் கொண்டாடுவோம்' என்பதாகும். |
| மே 24 | **தேசிய சகோதரர்கள் தினம்** | |
| மே 25 | **உலக கால்பந்து தினம்** | 2024ஆம் ஆண்டு, முதல் சர்வதேச கால்பந்து போட்டியின் 100வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது. இந்த மைல்கல்லைக் கௌரவிக்கும் வகையில், மே 25ஐ உலக கால்பந்து தினமாக அறிவித்து, மே 7, 2024 அன்று ஐ.நா பொதுச் |

| | | |
|---|---|---|
| | | சபை A/RES/78/281 தீர்மானத்தை நிறைவேற்றியது. |
| **மே 25** | **ஆப்பிரிக்க தினம்** | மையக் கருத்து: 2024 – 21வது நூற்றாண்டிற்கு ஏற்ற கல்வி. |
| **மே 28** | **உலக பசி தினம்** | 2024 உலக பசி தினத்தின் கருப்பொருள், ‘வளர்க்கும் தாய்மார்கள், செழிக்கும் உலகம்’ என்பதாகும் |
| **மே 28** | **உலக டுகோங் தினம்** | கடல் பசு என்று அழைக்கப்படும் டுகோங் என்பது ஒரு கடல் பாலூட்டியாகும். இது இந்திய மற்றும் மேற்கு பசிபிக் பெருங்கடல்களின் ஆழமற்ற கடலோர நீரில் கடல் புல் மீது மேய்கிறது. |
| **மே 29** | **ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் வீரர்களின் சர்வதேச தினம்** | இந்த ஆண்டு, ‘எதிர்காலத்திற்கு ஏற்றது: ஒன்றாகச் சேர்ந்து சிறப்பாகக் கட்டியெழுப்புதல்’ என்பதாகும். |
| **மே 29** | **சர்வதேச எவரெஸ்ட் தினம்** | 1953இல் இதுவரை எட்ட முடியாமல் இருந்த, எவரெஸ்ட் சிகரத்தில் முதன் முதலில் ஏறி சாதனை படைத்த, நேபாளத்தின் டென்சிங் நோர்கே மற்றும் நியூசிலாந்தின் ஹிலாரி ஆகியோரின் நினைவாக, மே 29 அன்று இந்த உலகம் சர்வதேச எவரெஸ்ட் தினத்தைக் கடைப்பிடிக்க உள்ளது. |
| **மே 30** | **சர்வதேச உருளைக்கிழங்கு தினம்** | இந்த ஆண்டின் கருப்பொருள், ‘பன்முகத் தன்மையை அறுவடை செய்தல், நம்பிக்கையை ஊட்டுதல்’ என்பதாகும். |
| **மே 31** | **உலக புகையிலை எதிர்ப்பு தினம்** | இந்த ஆண்டின் கருப்பொருள், புகையிலைத் தொழிலின் தாக்கத்தில் இருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல்’ என்பதாகும். |